| MCOP. No. 334/2024 | Name : – சக்திவேல் | P W– 1 | Date:24.06.2025. |
|---|---|---|---|

**குறுக்கு விசாரணை :– ( 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

(1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டதன் பேரில் 1–ம் எதிர்மனுதாரர் தரப்பிற்கான குறுக்கு விசாரணை இல்லையென்று முடிக்கப்பட்டது).

**குறுக்கு விசாரணை :– ( 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

இந்த விபத்தில் நான் பயணம் செய்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகனமும், காரும் ஈடுபட்டுள்ளது என்றால் சரிதான். நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் மனுவில் சேர்க்காததால் மனு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்களை தவிர அனைத்து ஆவணங்களும் ஜெராக்ஸ் நகல்கள் என்றால் சரிதான். விபத்தானது 02.11.2024–அன்று நடைபெற்றது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2, 3, 4 ஆவணங்களில் நான் தன்னிச்சையாக கீழே விழுந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு கார் எந்த விதத்திலும் காரணமல்ல என்றும், நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக அந்த கார் மீது விபத்து வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சென்னையில் இருந்து திருச்சி நோக்கி வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தோம். கார் எனக்கு பின்னால் வந்தது. எந்தவித சைகையும் செய்யாமல், பின்னால் கார் வருவதை கவனிக்காமல் கார் மீது மோதி காருக்கு பெருத்த சேதம் ஏற்படுத்தி விட்டேன் என்றால் சரியல்ல. என் மீது தவறு இருந்ததால் தான் அரசாங்க மருத்துவமனையில் சேரும் போது நாங்களே கீழே விழுந்து விட்டதாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. கார் உரிமையாளர் என் மீது இரக்கப்பட்டு மருத்து செலவிற்கு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் காரின் உரிமையாளரும், ஓட்டுநரும் இல்லை. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச்சென்றேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு செல்லத்தக்க ஓட்டுநர்

உரிமம் இருந்ததா என்றால் 04.02.2025 அன்று தான் நான் ஓட்டுநர் உரிமம் எடுத்தேன். எனது ஓட்டுநர் உரிம எண் T N 46 20250000562 ஆகும். இருசக்கர வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டி நான் தான் விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும், அதனால் 2-ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் என் அண்ணன் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் தற்போதும் பைனான்ஸ் கம்பெனியில் தான் வேலை பார்க்கின்றேன். ஆரம்பத்தில் எனக்கு 14,000/- ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள், அதே சம்பளத்தை தான் தற்போதும் பெற்று வருகின்றேன். விபத்தில் எனக்கு வலது தோள்பட்டை காரை எலும்பு மட்டும் முறிவு அடைந்தது, தற்போது அந்த எலும்பு கூடிவிட்டது. பைக் ஓட்டும் போது அவ்வப்போதுவலி ஏற்படுகின்றது. மருத்துவ தகுதிச்சான்று கொடுத்து தான் ஓட்டுநர் உரிமம் பெற்றேன். எனக்கு எந்த விதமான பகுதி நிரந்தர ஊனமும், உடல் உபாதைகளும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்றும், விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்பதாலும், மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை:-</u>

விபத்து ஏற்பட்டவுடன் நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். மருத்துவர் விபத்து பற்றி என்னிடம் கேட்டு எழுதிக்கொண்டாரா அல்லது வேறு யாரேனும் சொன்னார்களா என்றால் என் அண்ணன் சொன்னார். நான் மருத்துவமனையில் அனுமதிக்கும் போது சுயநினைவு இல்லாமல் இருந்தேன். நான் ஓட்டுநர் உரிமம் எடுப்பதற்கு முன்பு பழகுநர் உரிமம் வைத்திருந்தேன்.

**<u>மறு குறுக்கு விசாரணை:–</u>**

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2, 3 ஆவணங்களில் நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன் என எவ்வித குறிப்பும் இல்லையென்றால் சரிதான்.

**<u>மீண்டும் மறு விசாரணை :– இல்லை.</u>**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**